**செய்தி வெளியீடு: 346** **நாள்.14.07.2016**

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் தலைமையில் உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறையின் ஆய்வுக்கூட்டம்!

### கலப்படமில்லாத தரமான உணவுப் பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்ய அமைச்சர் வேண்டுகோள்!

—-***—–—

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறையின் ஆய்வுக்கூட்டம் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் தலைமையில் இன்று (14.07.2016) காலை 11.00 மணியளவில் சென்னை, டி.எம்.எஸ். வளாகத்தில் உள்ள தேசிய ஊரக நலவாழ்வுக் குழுமம் (NRHM) அலுவலக ஆய்வரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் உணவு பாதுகாப்புத்துறையின் மூலமாக வழங்கப்பட்ட உரிமங்கள் (License) மற்றும் பதிவுகள் (Registration), இத்துறையின் சார்பாக எடுக்கப்பட்ட உணவு மாதிரிகள், அதன் தன்மைகள், அதற்குரிய மேல் நடவடிக்கை குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது. பாலில் கலப்படம் செய்வதை தடுக்கப்படுவது குறித்து உரிய ஆலோசனை வழங்கப்பட்டது.

பள்ளி, கல்லூரிகளுக்கு அருகில் போதை தரும் சாக்லெட் மற்றும் ஐஸ்கீரிம் விற்பனையை தடுப்பது குறித்தும் எல்லா மாவட்டத்திலும் பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு அருகில் உள்ள கடைகளில் மெல்லும் புகையிலை வகைகள், காலாவதியான குளிர்பானங்கள், சாக்லெட் மற்றும் உணவு பொருள்கள் விற்கப்படுகின்றதா என்பது குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதன் அடிப்படையில் 12.07.2016 வரை பள்ளிகள் / கல்லூரிகள் அருகில் அமைந்துள்ள 8802 கடைகள் பரிசோதனை செய்யப்பட்டது. 2648 Kg பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன, 82 மாதிரிகள் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டன. தொடர்ந்து பள்ளிகள் / கல்லூரிகள் அருகில் உள்ள கடைகளில் இது போன்ற பொருள்கள் விற்பனை செய்யப்படுவது குறித்து தொடர் கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இக்கூட்டத்தில் பேசிய அமைச்சர்,

மெல்லும் வகை புகையிலையை பயன்படுத்துவதன் மூலம் 90 சதவீதம் வாய்ப்புற்றுநோயும், புகைக்கும் வகை புகையிலையை பயன்படுத்துவதன் மூலம் 90 சதவீதம் நுரையீரல் புற்றுநோயும் ஏற்படுகிறது. இதனை கருத்தில் கொண்டு, **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா** அவர்கள் புற்று நோயை ஏற்படுத்தும் வாயிலிட்டு மெல்லும் வகை புகையிலை பொருட்களான பான்மசாலா, குட்கா ஆகியவற்றின் உற்பத்தி, இருப்பு மற்றும் உபயோகத்தை தடை செய்து தமிழக மக்களை புற்றுநோய் அரக்கனிடமிருந்து காப்பாற்றியுள்ளார்கள். **மாண்புமிகு அம்மா** அவர்களை பொறுத்தவரையில் பொதுமக்களை பாதிக்கும் எந்த ஒரு செயலையும் தமிழக மண்ணில் அனுமதிக்கவே மாட்டார்கள்.

மேலும் கலப்படம் இல்லாத தரமான உணவு பொருட்கள் வழங்குதல் குறித்த விழிப்புணர்வினை வணிகர்களுக்கு ஏற்படுத்தவும் மற்றும் கலப்படம் இல்லாத தரமான உணவு பொருட்கள் விற்கப்படுகின்றது என்ற நம்பிக்கையை பொதுமக்களிடமும் ஏற்படுத்தும் அளவிற்கு மேலும் சிறப்பான முறையில் களப்பணியாற்றவும் அறிவுறித்தினார்.

தரமற்ற கலப்பட உணவு பொருட்கள் விற்பனை செய்வது தெரியவந்தால் பொதுமக்கள் **9444042322** என்ற எண்ணிலும் commrfssa@gmail.com, என்ற இமெயில் முகவரியிலும் புகார் தெரிவிக்கலாம்.

தென்மேற்கு பருவ மழை தொடங்கவுள்ளதையொட்டி டெங்கு (Dengue) மற்றும் தொற்று நோய்கள் பரவாமல் இருப்பதை தடுக்க உரிய நடவடிக்கை எடுக்கவும், டெங்கு குறித்த விழிப்புணர்வை வியாபாரிகள் மத்தியில் ஏற்படுத்தவும் அமைச்சர் வேண்டுகோள் விடுத்தார்.

இக்கூட்டத்தில் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர்.ஜெ.ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., உணவு பாதுகாப்புத் துறை ஆணையர் திருமதி பெ.அமுதா, இ.ஆ.ப., மற்றும் மாவட்ட அளவிலான உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**